DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

**OS.No.** 611/2022

Name : Usha PW-1

Father's Name : Age - 64

Taluk திருவள்ளூர் Village MUDUNUR

Caste

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

**குறுக்கு விசாரணை** Date: 22.07.2025

தாவாவில் எனக்கு பாகம்கோரிதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் தந்தை நெல் வியாபாரம் செய்துவந்தார். அவர் வீட்டில் வைத்துதான் வியாபாரம் செய்துவந்தார். எனக்கு 1975ம் ஆண்டு திருமணம் நடந்தது. எனக்கு அமுதா மற்றும் வேல்முருகராஜ் என்ற பிள்ளைகள் உள்ளனர். நான் தற்போது முதுகூர் மற்றும் திருவான்மியூரில் மாரிமாரி வசித்துவருகிறேன். திருமணத்திற்கு முன்பே என் கணவர் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர். என் தந்தை மற்றும் என் சகோதரர் ஒரே இடத்தில் தனித்தனியாக வசித்துவந்தனர். என் அப்பா 2015ம் ஆண்டில் காலமானர் என் தாயார் 2020ல் காலமானார். அவர்களின் இருவரின் ஈமச்சடங்குகளை என் சகோதரர்தான் செய்தார் என்றால், என் தந்தை சேர்த்துவைத்த பணத்தைவைத்துதான் அவர் ஈமச்சடங்கு செய்தார். என் அப்பாவிற்கு எல்லா சடங்குகளுக்கும் சென்றேன், என் அம்மாவிற்கு நடந்த சடங்குகள் எதற்கும் என்னை அழைக்கவில்லை. காரியத்திற்கு என் சொந்தக்காரர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். தாவா சொத்து என் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரிதான். திருவான்மியூரில் உள்ள சொத்தை 2012ம் வருடத்தில் என் தாயார் என் மகன் பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல, அந்த சொத்து நாங்கள் வாங்கிய சொத்தாகும் அதை அவர் என் மகன் பெயரில் செட்டில்மெண்ட் செய்துவிட்டார். 2012ஆம் ஆண்டு என் தந்தை என் சகோதரர் பெயருக்கு தான செட்டில்மெண்ட எழுதும்போது நல்ல உடல்நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. 2015ம் ஆண்டுவரை என் தந்தைதான் அரிசி வியாபாரம் பார்த்துவந்தார் என்றால் சரிதான். என் தந்தை முழு சுய நினைவுடன்தான் 2012ம்

ஆண்டு என் சகோதரர் பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் அது சரியல்ல. அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. அதே போல் எனது மகனுக்கும் பிரதிவாதியின் சம்மதத்தோடுதான் தான செட்டில்மெண்ட் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. 2012ம் ஆண்டில் என் அப்பா பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிய விவரம் எனக்குத் தெரியாது. என் தந்தை இறந்தபின்புதான் அந்த விவரம் எனக்குத் தெரியவந்தது. 2012ம் ஆண்டு 8வது மாதம் என் மகனுக்கு தான செட்டில்மெண்ட் எழுதிவைத்தவிவரம் எனக்குத் தெரியும். இரண்டு தான செட்டில்மெண்ட் பற்றிய விவரம் எனக்குத் தெரிந்திருந்தும் இவ்வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து என் தந்தைக்குச் சொந்தமான சொத்து என்பதால் அதை அவர் யாருக்கு வேண்டுமானாலும் எழுதலாம் என்றால் அவர் அதை சுயநினைவுடன் எழுதவில்லை. தாவா சொத்து என் தகப்பனாருக்குச் சொந்தமானது என்பதால் அதை அவர் யாருக்குவேண்டுமானாலும் எழுதிக் கொடுக்கலாம் என்றால், எனக்கும் அதில் பங்குண்டு. தாவாப்படி எந்த பரிகாரமும் எனக்குக் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

21.2.2017.

Typed to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct

22/2/25

I ADDITIONAL DISTRICT JUDGE
TIRUVALLUR